TO BE PUBLISHED IN
THE WEBSITE OF DOE

13

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் / Department of Examinations, Sri Lanka

සියලු ම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் / Department of Examinations, Sri Lanka

# இலங்கை அரசாங்க நூலகர் சேவையின் II ஆம் தரத்தைச் சேர்ந்த அலுவலர்களுக்கான வினைத்திறன் காண் தடைதாண்டல் பரீட்சை - 2017 (II) (2019)

# Efficiency Bar Examination for Officers in Grade II of the Sri Lanka Government Librarians' Service - 2017 (II) (2019)

## (01) பொது நிர்வாகம் மற்றும் நிதி முறைமைகள்
## General Administration and Financial Procedure

### பகுதி I - பொது நிர்வாகம்
### Part I - General Administration

ஒரு மணித்தியாலம் 30 நிமிடங்கள்
One hour and 30 minutes

ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.

1. தாபன விதிக்கோவையில் குறிப்பிட்டிருப்பதற்கிணங்க பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.
   (i) உத்தியோகத்தரொருவருக்கு மேலதிக நேரக் கொடுப்பனவு வழங்கக்கூடிய சந்தர்ப்பங்களைச் சுருக்கமாகக் குறிப்பிடுக. *(02 புள்ளிகள்)*
   (ii) மேலதிக நேரக் கொடுப்பனவைப் பெற்றுக்கொள்ள உரித்தில்லாத அரசாங்க உத்தியோகத்தர்களின் தரம் எதுவாகும்? *(02 புள்ளிகள்)*
   (iii) உத்தியோகத்தர்களுக்கு கொடுப்பனவு செய்யப்படும் மேலதிக நேரக் கொடுப்பனவினைக் கணிப்பிட வேண்டிய வரையறைகள் யாவை? *(06 புள்ளிகள்)*

2. (i) அரசாங்க உத்தியோகத்தர் ஒருவருக்கு திடீர் விபத்து மற்றும் விசேட பிணி லீவு வழங்கக்கூடிய சந்தர்ப்பங்களினை, தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகளுக்கிணங்க விவரிக்குக. *(05 புள்ளிகள்)*
   (ii) மேற்குறிப்பிட்டுள்ளபடி விபத்து நடைபெறுவதற்கு முன்னர், விசேட பிணி லீவுக்கு விண்ணப்பிக்கும் உத்தியோகத்தரொருவருக்கு, லீவு வழங்கும் போது, அதற்கான வரையறைகள் யாவை? *(05 புள்ளிகள்)*

3. 1998 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்க தேசிய நூலகம் மற்றும் சுவடிகள் சேவைச் சட்டத்தின் படி, பணிப்பாளர் சபையின் செயலாற்றுகைகளை (functions of board) சுருக்கமாக விவரிக்குக. *(10 புள்ளிகள்)*

4. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்புக்கிணங்க மக்களின் இறைமை பிரயோகிக்கப்படவும், அனுபவிக்கப்படவுமுள்ள உரிமையினைச் சுருக்கமாகக் காட்டுக. *(10 புள்ளிகள்)*

5. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 19 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்திற்கிணங்க, சனாதிபதியின் தத்துவங்களையும் பணிகளையும் சுருக்கமாகத் தருக. *(10 புள்ளிகள்)*

6. பின்வரும் விடயங்களில் ஐந்து தொடர்பாகச் சுருக்கமாக விவரிக்குக.
   (i) காலங் கடந்த லீவு
   (ii) சம்பள ஏற்றத்தினைப் பின்போடல்
   (iii) சம்பள கடன் முற்பணம் வழங்கக்கூடிய கருமங்கள்
   (iv) அரசமைப்பு பேரவையின் அமைப்பு
   (v) விடுமுறைநாள் சம்பளங்கள்
   (vi) இரகசியக் கடிதம்

*(02 × 5 = 10 புள்ளிகள்)*

* * *

Department of Examinations Sri Lanka
Department of Examinations Sri Lanka

සියලු ම හිමිකම් ඇවිරිණි/
முழுப் பதிப்புரிமையுடையது/
All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் / Department of Examinations, Sri Lanka

# இலங்கை அரசாங்க நூலகர் சேவையின் II ஆம் தரத்தைச் சேர்ந்த அலுவலர்களுக்கான வினைத்திறன் காண் தடைதாண்டல் பரீட்சை - 2017 (II) (2019)

# Efficiency Bar Examination for Officers in Grade II of the Sri Lanka Government Librarians' Service - 2017 (II) (2019)

## (01) பொது நிர்வாகம் மற்றும் நிதி முறைமைகள்
## General Administration and Financial Procedure

### பகுதி II - நிதி முறைமைகள்
### Part II - Financial Procedure

ஒரு மணித்தியாலம் 30 நிமிடங்கள்
One hour and 30 Minutes

**ஐந்து** வினாக்களுக்கு **மாத்திரம்** விடை எழுதுக.

---

**1.** (i) 'திரட்டுநிதி' என்றால் என்னவென்பதனை சுருக்கமாக விளக்குக. *(02 புள்ளிகள்)*

(ii) திரட்டுநிதியிலிருந்து செய்யப்படும் செலவினத்திற்கான பிரதான ஏற்பாட்டு வகைகள் **இரண்டினையும்** பெயரிடுக. *(02 புள்ளிகள்)*

(iii) புதிய கருத்திட்டமொன்றின் திட்டமிடலானது நிறைவேற்றப்படும் படிமுறைகள் **ஆறினைப்** பெயரிடுக. *(06 புள்ளிகள்)*

**2.** (i) (அ) அரச வங்கிக் கணக்கொன்றிலிருந்து கொடுப்பனவு செய்யும் போது வரையப்படும் காசோலையொன்றில் எத்தனை உத்தியோகத்தர்கள் கையொப்பமிட வேண்டும்? *(02 புள்ளிகள்)*

(ஆ) காசோலையொன்றின் 'வரைவோன்' மற்றும் 'கொடுப்பவன்' தொடர்பில் விளக்குக. *(02 புள்ளிகள்)*

(ii) 'கட்டுநிதி' என்பதனை சுருக்கமாக விளக்குக. *(03 புள்ளிகள்)*

(iii) எந்த விடயங்கள் தொடர்பில் கணக்கீட்டு உத்தியோகத்தர் ஒருவரினால் உபகட்டுநிதிகள் வழங்கப்படுகின்றன? *(03 புள்ளிகள்)*

**3.** (i) நிதி ஒழுங்குவிதிகள் 102 இன்படி நட்டங்கள் மற்றும் இழப்புகளிற்குள் உள்ளடங்கும் சொத்துக்களின் வகைகள் **நான்கினைக்** குறிப்பிடுக. *(04 புள்ளிகள்)*

(ii) நட்டங்கள் தொடர்பில் கையாளுவதற்கு அதிகாரமளிக்கப்பட்டவர்கள் யாவர்? *(06 புள்ளிகள்)*

**4.** (i) அரச பிரிவு நிதிக் கணக்காய்வினை பலப்படுத்துதல் தொடர்பில் அரச கணக்காய்வு நடவடிக்கை தொடர்பாக பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட சட்டத்தினைப் பெயரிடுக. *(01 புள்ளிகள்)*

(ii) கீழே குறிப்பிடப்பட்ட நிறுவனங்களிற்கு உள்ளக கணக்காய்வாளரொருவர் யாரால் நியமிக்கப்படுகின்றார்?

(அ) அமைச்சுக்கள்

(ஆ) திணைக்களங்கள்

(இ) ஏனைய அரச நிறுவனங்கள் *(03 புள்ளிகள்)*

(iii) அரச நிறுவனமொன்றில் உள்ளக கணக்காய்வு அலகினை ஸ்தாபிப்பதற்கான நோக்கங்கள் **மூன்றினைக்** குறிப்பிடுக. *(06 புள்ளிகள்)*

**5.** (i) அரசாங்க அச்சகக்குழுவில் உள்ளடங்கும் உறுப்பினர்கள் குழுமத்தினைப் பெயரிடுக. *(05 புள்ளிகள்)*

(ii) மேற்குறிப்பிட்ட குழுவினது செயற்பாடுகள் **ஐந்தினைக்** குறிப்பிடுக. *(05 புள்ளிகள்)*

**6.** கீழே குறிப்பிடப்பட்ட தலையங்கள் தொடர்பில் சுருக்கக் குறிப்பு எழுதுக.

(i) சாதாரண ஆணைச்சீட்டு

(ii) வர்த்தக கருத்திட்டம்

(iii) செய்தித்தாள் கொள்வனவு

(iv) பொது 172 பற்றுச்சீட்டு

(v) கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு *(02 × 5 = 10 புள்ளிகள்)*

* * *

Department of Examinations Sri Lanka